( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-05


# வினாத்தாள் - I

சுட்டெண்:- ...........................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

(01) அடைப்புகளுக்குள் உள்ள மூன்று உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

(02)



A B C D


மேலே காட்டப்பட்டுள்ள வடிவங்களில் வரையக்கூடிய சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை கூடிச்செல்லும் ஒழுங்குமுறையைக் காட்டும் விடை,

(1) C, A, D, B (2) C, D, A, B (3) A, C, B, D

(03) மாலாவின் தாய் மோகனின் சகோதரி எனின், மோகன் மாலாவின்,

(1) சித்தப்பா (2) மாமா (3) தாத்தா

(04)



இக்கார்ட்போர்ட் அட்டையிலிருந்து வெட்டக்கூடிய நிழற்றப்பட்டுள்ள முறையிலான பகுதிகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 4 (3) 6

(05) மரம் இருப்பது வீட்டிலிருந்து 20m கிழக்குத் திசையிலும், கிணறு இருப்பது வீட்டிலிருந்து 40m வடக்குத் திசையிலும், நாய் இருப்பது கிணற்றிலிருந்து 20m கிழக்குத் திசையிலும் ஆகும். இதற்கேற்ப, மரம் இருப்பது நாயிலிருந்து,

(1) 40m வடக்குத் திசையில் (2) 20m தெற்குத் திசையில் (3) 40m தெற்குத் திசையில்


(06) நான்கு இலக்கங்களைக் கொண்ட எண் ஒன்றில் முதல் மூன்று இலக்கங்களின் கூட்டுத்தொகையின் அரைவாசியாக 4 ஆம் இலக்கம் காணப்பட்டது. அதன்படி, அவ்வெண்ணாக இருக்கக்கூடியது,

(1) 3216 (2) 3546 (3) 2798

(07) "நான் நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்தேன்." என அண்ணன் நேற்று முன்தினம் கூறினார். இன்று வெள்ளிக்கிழமை எனின், அண்ணன் இலங்கைக்கு வந்தது,


(1) செவ்வாய்க்கிழமை (2) ஞாயிற்றுக்கிழமை (3) திங்கட்கிழமை

(08)





இச்சதுரமுகி கார்ட்போர்ட் அட்டையினால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் எல்லா எதிர்ப்பக்க முகச் சோடிகளினதும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 8 ஆகும். அதன்படி, இச்சதுரமுகியை விரித்தபோது காணக்கிடைக்கும் முறை,


(1)




(2)




(3)








kalvi.lk


(09) ஒரு கயிற்றை சரிநடுவில் இரண்டாக மடித்து ஒரே சமனான நீளமுள்ள 6 சிறிய துண்டுகளாக வெட்டப்பட்டது. அதன்படி, கயிற்றை வெட்டிய பின் கிடைத்த கயிற்றுத் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 11 (2) 7 (3) 12


(10) கீழே உள்ள ஒவ்வொரு கூட்டினுள்ளே தரப்பட்டுள்ள உருச்சோடியில் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்ட உருச்சோடியைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(11) 

இக்குறியீடுகள் பத்திற்கும் குறைவான எண்களைக் குறிக்கும். இக்குறியீடுகளின் தொடர்புகளின்படி,  இவ்விரு குறியீடுகளினதும் பெறுமதியாக இருக்கமுடியாதது,

(1) 75 (2) 74 (3) 96


(12) 

உருவில் ஒரேயளவான கனவுருக்களையும் ஒரேயளவான சதுரமுகிகளையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள கனவுருக்களின் எண்ணிக்கையும் சதுரமுகிகளின் எண்ணிக்கையும் சமனாகும். அதன்படி, அதிலுள்ள கனவுருக்களின் எண்ணிக்கை,

(1) 6 (2) 4 (3) 5

(13) தற்போதிலிருந்து 5 மணித்தியாலங்களுக்குப் பின் நேரம் பி.ப. 6.30 மணியாகும். அதன்படி, தற்போதிலிருந்து 2 மணித்தியாலங்களுக்கு பின் நேரம்,

(1) பி.ப. 4.30 (2) பி.ப. 3.30 (3) பி.ப. 2.30

(14) 

இக்கடிகார முகத்தை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் வைத்துப் பார்த்தால் காணக்கிடைக்கும் நேரம்,

(1) 9.20 (2) 11.40 (3) 10.40


Education கல்வி අධ්‍යාපන

(15) கதைப்புத்தகம் ஒன்றில் 96 பக்கங்கள் உள்ளன. பிள்ளையொன்று அக்கதைப்புத்தகத்தில் 19 ஆம் பக்கத்திலிருந்து 72 ஆம் பக்கம் வரை வாசித்தது. அதன்படி, அப்பிள்ளை கதைப்புத்தகத்தில் வாசிக்காத பக்கங்களின் எண்ணிக்கை,

(1) 42 (2) 43 (3) 41

(16) அக்காவின் வயது 16 ஆக இருக்கும்போது தங்கையின் வயது அக்காவின் வயதில் அரைவாசியாகும். தங்கையின் வயது இரு மடங்காகும்போது அக்காவின் வயது,

(1) 32 (2) 20 (3) 24

(17) 


இவ்வுருவின்படி, திருமணமானவர்கள் எத்தனை பேர்?

(1) 8

(2) 4

(3) 6

(18) கமலா நீலம், சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை நிறங்களுக்கு மட்டுமே விருப்பமுடையவள். நீலா நீலம் மற்றும் மஞ்சள் நிறங்களை தவிர ஏனைய எல்லா நிறங்களுக்கும் விருப்பமுடையவள். சித்ரா மஞ்சள் மற்றும் பச்சை நிறங்களை தவிர ஏனைய எல்லா நிறங்களுக்கும் விருப்பமுடையவள். அதன்படி, மூவருமே விருப்பமுடைய நிறம்,

(1) நீலம் (2) பச்சை (3) சிவப்பு

(19) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

தாமரை மலர்கள் மலர்ந்திட
இலை மீது நீர் முத்துக்கள் மின்னிட
காற்றில் நீர்குமிழ்கள் நளினமாட
குளத்தின் அழகு மிளிர்ந்ததுவே

இப்பாடல் எதைப்பற்றி கூறுகின்றது.

(1) குளம் (2) முத்துக்கள் (3) நீர்குமிழ்கள்

kalvi.lk

சுட்டெண்:-........................................

(20) A, B, C ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.


..........A.......... தெரியாத நபர் ..........B.......... பிரம்போடு மெதுவாக பிரதான வீதியைக் கடக்கும்போது அனைத்து ..........C.......... நிறுத்தப்பட்டன.

(1) A - காது , B - சிவப்புப் , C - மக்களும் (2) A - கண் , B - வெள்ளைப் , C - வாகனங்களும்


(3) A - கண் , B - கறுப்புப் , C - பேச்சுகளும்


(21) பின்வருவனவற்றுள் சரியான கணிதக் கோவையைத் தெரிவு செய்க.


(1) $222 + 222 + 22 + 22 + 2 = 490$ (2) $222 + 222 + 22 + 2 + 2 = 485$ (3) $222 + 222 + 22 + 22 + 22 = 505$


(22) 

தரப்பட்டுள்ள கட்டத்திற்குள்ளே உள்ள வடிவங்களை மட்டும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உருவைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(23) 

இவ்வடிவத்தை ஒரு சதுர வடிவமாக மாற்றுவதற்கு அகற்றப்பட வேண்டிய சிறிய சதுரங்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 13 (2) 12 (3) 16

(24) எப்போதும் உண்மையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) வாகனங்கள் செல்ல எரிபொருள் தேவை (2) பூமி சூரியனைச் சுற்றி பயணிக்கும்.

(3) முதலை ஒரு நீர்வாழ் உயிரினம்.

(25) ஜனவரி 1 ஆம் திகதி புதன்கிழமையில் ஆரம்பிக்கும் 2021 ஆம் வருடத்தில் 163 வது நாள் என்ன கிழமையாகும்?

(1) புதன்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) வியாழக்கிழமை

(26) கீழே தரப்பட்டுள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

4 , 1 , 8 , 6 , 12 , 11 , 16 , 16 , 20 , ...........................

(1) 21 (2) 24 (3) 22


(27) 1 தொடக்கம் 20 வரையான எண்களை எழுதும்போது பத்தினிடத்தில் இலக்கம் 1 எத்தனை தடவைகள் இடம்பெறும்?


(1) 12 (2) 11 (3) 10


(28) வரிசையொன்றில் ஆண், பெண், ஆண், பெண் ............... என்ற ஒழுங்கில் 37 மாணவர்கள் நின்றனர். அதன்படி, அவ்வரிசையில் சரிநடுவில் நிற்பவர்,


(1) ஆண் பிள்ளையாகும். (2) பெண் பிள்ளையாகும். (3) கூறமுடியாது.


(29) சதுர வடிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒன்றுடன் ஒன்று சேர்க்க வேண்டிய இரண்டு உருக்களைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

A 

B 

C 

D 

E 


(1) B யும் E யும் (2) D யும் C யும் (3) A யும் D யும்

kalvi.lk

(30) பின்வரும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.

**கருத்து** :- ஒரு பொருளை பார்த்து அவற்றை நல்லவை என்று எண்ணி ஏமாறக்கூடாது.

(1) தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை (2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல (3) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

(31) 


A , B , C , D என்பன நான்கு நகரங்கள் ஆகும். இங்கு A யிலிருந்து B ஊடாக C வரையுள்ள தூரம் 16km ஆகும். A யிலிருந்து B ஊடாக D வரையுள்ள தூரம் 19km ஆகும். அதன்படி, D யிலிருந்து B ஊடாக C வரையுள்ள தூரம்,

(1) 21km (2) 35km (3) 18km

(32) ஆசிமின் வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கு உள்ள தூரம் 500m ஆகும். அவன் காலையில் வைத்தியசாலைக்குச் செல்லும்போது 200m சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் வைத்தியசாலைக்குச் சென்றான். அதன்பின் அவன் வைத்தியசாலையில் மருந்துகளை வாங்கிவிட்டு வீடு திரும்பினான். அதன்படி, அவன் பயணித்த மொத்த தூரம்,

(1) 1300m (2) 1400m (3) 1600m

(33) பின்வரும் உரையாடலை வாசிக்குக.



"அண்ணா, அம்மாவும் அப்பாவும் எங்கே போனார்கள்?


தாத்தாவையும் பாட்டியையும் பார்ப்பதற்காக போனார்கள் தங்கை."


மேற்படி, உரையாடலில் இடம்பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 6




(34) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

 இற்கு  எனின்,  இற்கு,

(1)  (2)  (3) 

(35) 

இக்கார்ட்போர்ட் அட்டையைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய சதுரமுகி,

(1)  (2)  (3) 

(36) பெட்டியொன்றில் நான்கு பச்சை நிறப் பந்துகளும் நான்கு வெள்ளை நிறப் பந்துகளும் உள்ளன. பந்துகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான மூன்று பந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பந்துகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 4 (2) 7 (3) 5

(37) கடிகாரமொன்று 12 மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒலிக்கும். அது இரண்டாவது தடவை நண்பகல் 12.00 மணிக்கு ஒலித்தது. அதன்படி, அது 27 ஆவது தடவை ஒலிப்பது,

(1) மாலை 6.00 மணிக்காகும் (2) நள்ளிரவு 12.00 மணிக்காகும் (3) காலை 6.00 மணிக்காகும்

(38) ஒரு பாடசாலையில் குறித்த கண்காட்சியொன்று பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை 7 நாட்கள் நடைபெற்றன. அதன்படி, இந்த கண்காட்சி நடைபெற்றிருக்கக்கூடிய வருடம்,

(1) 2017 (2) 2022 (3) 2020

(39) ஒரு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்களினதும் முச்சக்கரவண்டிகளினதும் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 35 ஆகும். அதன்படி, அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்களின் எண்ணிக்கை,

(1) 5 (2) 6 (3) 4

(40) நோயாளி ஒருவருக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு முறை ஒன்று வீதம் உட்கொள்வதற்கு ஏழு மருந்து வில்லைகள் வழங்கப்பட்டன. மருந்து வில்லைகளை உட்கொள்ள நோயாளிக்கு எடுக்கும் மொத்த நேரம்,

kalvi.lk

(1) 7 மணித்தியாலங்கள் (2) 6 மணித்தியாலங்கள் (3) 8 மணித்தியாலங்கள்

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-05
# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

அது ஒரு அழகான கடற்கரை. பரந்து விரிந்த வெண்மணலில் கால்களை புதைத்து சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பல வண்ண பட்டங்கள் வானில் அழகாக பறந்தன. கடலலை தரையை வருடிச் சென்ற விதம் மிகவும் அழகு. தொலைவில் தெரிந்த அடிவானில் பகலவன் செந்நிறமாக காட்சியளித்தான்.

(i) இப்பந்தியில் குறிப்பிடப்படும் பொழுது யாது? ..........................................................

(ii) பந்தியில் வந்துள்ள பெயரடைமொழிச் சொற்களை எழுதுக. ..........................................................

(iii) "தொட்டு" என்ற கருத்தைத் தரும் சொல்லை இனங்கண்டு எழுதுக. ..........................................................

(iv) உயர்திணை படர்க்கைப் பெயர்ச்சொல்லை எழுதுக. ..........................................................

(v) "கடலலை" என்பதை பிரித்து எழுதுக. ..........................................................

**(02) சரியான எழுத்தைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

(i) மி ............ னஞ்சல் ( ந் / ண் / ன் ) (ii) இ ........... ஞர் ( ளை / லை / ழை )

**(03) இடைவெளிகளுக்குப் பொருத்தமான ஒலிமரபுச் சொற்களின் கீழ்க் கோடிடுக.**

(i) சிங்கம் :- ................................ ( கத்தும் , ஊளையிடும் , கர்ச்சிக்கும் )

(ii) மயில் :- ................................ ( அகவும் , கரையும் , இரையும் )

**(04) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் சரியான பழமொழியாக எழுதுக.**

மனமே / செய்யும் / போதும் / மருந்து / பொன் / என்ற :- ..........................................................

**(05) முதலில் தரப்பட்டுள்ள உவமைத் தொடர்புக்குச் சமனான கருத்தை வெளிப்படுத்தும் உவமைத் தொடரினை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

உயிரும் உடலும்போல :- ( கிணற்றுத் தவளைப்போல , நகமும் சதையும்போல , சூரியனைக்கண்ட பனிப்போல )

**(06) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்பாற் சொற்களைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

(i) செவிடன் :- .............................................. (ii) உழத்தி :- ..............................................

**(07) பின்வரும் பந்தியில் இடம்பெற்றுள்ள மூன்று சொற்களில் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. அச்சொற்களை இனங்கண்டு புள்ளிக்கோட்டின் மீது திருத்தமாக எழுதுக.**

எறும்புகள் சமூகத்தில் தேணீயைப்போலவே ராணி எறும்பு, ஆண் எறும்புகள், வேலைக்கார எறும்புகள் என மூன்று பிறிவுகள் உள்ளன. வேலைக்கார எறும்புகளில் சில உலவாளி எறும்புகளும் உண்டு.

(i) .............................. (ii) .............................. (iii) ..............................

**(08) பின்வரும் ஆண்பால் வாக்கியத்தைப் பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

வேடன் விலங்குகளை வேட்டையாடினான். :- ..........................................................

**(09) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) அம்மா மகளுக்கு உணவு .............................. ( கொடுத்தார்கள் , கொடுத்தாள் , கொடுத்தது )

(ii) நீங்கள் பாடசாலைக்குச் .............................. ( சென்றீர்களா? , சென்றாயா? , சென்றானா? )

(iii) பேட்டுக் கோழியின் பின்னே குஞ்சுகள் .................................... ( சென்றது , சென்றான் , சென்றன )

(iv) நானும் அம்மாவும் சந்தைக்குச் ............................ ( சென்றேன் , சென்றோம் , சென்றார்கள் )

**(10) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) I have two ..................... ( hand / hands ) (ii) ..................... ( Is / Are ) this your book?

**(11) பின்வரும் ஆங்கில எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி ஆங்கிலச் சொற்களாக்குக.**

(i) s / n / e / o :- .................................... (ii) a / n / i / r :- ....................................

**(12) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

தயவு செய்து உட்காருங்கள் :- ....................................................................................................

**(13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**


நாம் விளையாடுவோம் :- ....................................................................................................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**


கிரவா கொள பாட்டய் :- . ....................................................................................................

(15) கீழே தரப்பட்டுள்ள உரோம எண்குறிகளை இந்து அராபிய எண்களில் எழுதுக.

(i) XIV :- .................................... (ii) XII :- ....................................

(16) 

இச்சதுரமுகியிலுள்ள மொத்த விளிம்புகளின் நீளங்களின் கூட்டுத்தொகை 48cm ஆகும். அதன்படி, இச்சதுரமுகியின் விளிம்பொன்றின் நீளம் யாது? ............................

(17) 

இம்முக்கோணத்தில் எல்லாப் பக்கங்களும் நீளத்தில் சமனாகும். அதன்படி, இம்முக்கோணத்தின் சமச்சீர் அச்சுக்களை வரைந்துக் காட்டுக.

(18)

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | | 12 | 9 | 3 |
| | 6 | | | 5 |
| 10 | | 8 | 13 | |

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களிலிருந்து நான்கு இலக்கங்களைப் பயன்படுத்தி பொது வித்தியாசம் 3 ஆகவுள்ள எண் கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக. ..........................................................

(19) (i) ஒன்றினிடத்து இலக்கம் 7, பத்தாயிரத்தினிடத்து இலக்கம் 3, நூறினிடத்து இலக்கம் 1, ஆயிரத்தினிடத்து இலக்கம் 6, பத்தினிடத்து இலக்கம் 2 ஆகவுள்ள எண்ணை எழுதுக. ....................................................

(ii) 99 999 இற்குப் பின்னுள்ள எண்ணை எழுதுக. ..........................................

(20) ஒரு பெட்டியிலுள்ள 24 முட்டைகளில் $\frac{3}{4}$ சிவப்பு முட்டைகளாகும். மீதமுள்ள முட்டைகள் வெள்ளை முட்டைகளாகும். அதன்படி, பெட்டியில் எத்தனை வெள்ளை முட்டைகள் உள்ளன?..........................................................

(21)


| | | |
|---|---|---|
| 95 | | 73 |
| | 158 | |
| 175 | | 136 |

இக்கட்டத்தினுள் உள்ள எண்களுள் 5 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண்களை எழுதுக.

....................................................................................................

(22) முற்பகல் 9.15 இற்கு புத்தகம் ஒன்றை வாசிக்க ஆரம்பித்த யமுனாவிற்கு அதனை வாசித்து முடிப்பதற்கு 4 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் எடுத்தது. அதன்படி, அவள் புத்தகத்தை வாசித்து முடித்த நேரம் யாது? ....................

**(23) குறித்த பாடசாலையொன்றின் மாணவர்கள் அதிகமாக விரும்பும் விளையாட்டு தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.**





(i) எல்லே விளையாட்டை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை, காற்பந்து விளையாட்டை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையைப்போல் மூன்று மடங்காகும். அதனை வரைபின் உரிய நிரலில் நிழற்றிக் காட்டுக.

(ii) வொலிபோல் விளையாட்டை விட எல்லே விளையாட்டை அதிகமாக விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது? ........................

kalvi.lk


(24) $\frac{1}{2}$ , $\frac{1}{4}$ , $\frac{3}{4}$ ஆகிய எண்களை பெறுமதி கூடிச்செல்லும் ஒழுங்கில் (ஏறுவரிசைப்படுத்தி) எழுதுக. ........................

(25) 



இக்கனவுருவின், சுட்டெண்:-..........................

(i) பக்கத்தோற்றத்தில் காணப்படும் ஆங்கில எழுத்து யாது? ..........................................

(ii) திட்டத்தில் காணப்படும் ஆங்கில எழுத்து யாது? ..........................................

(26) (i) 

இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? ..........................................

(ii) 

இவ்வுருவினால் எல்லாப் பக்கங்களும் நீளத்தில் சமனான முக்கோணமொன்று காட்டப்பட்டுள்ளது.

இம்முக்கோணியில் $\frac{3}{4}$ ஐ நிழற்றிக் காட்டுக.

(27) ஒரு பூரணமற்ற சிட்டை கீழே தரப்பட்டுள்ளது. சிட்டையிலுள்ள நான்கு வெற்றிடங்களையும் நிரப்புக.

| பொருட்களின் வகைகள் | ஒன்றின் விலை (ரூபாய்) | கொள்வனவு செய்த அளவுகள் | தொகை | |
|---|---|---|---|---|
| | | | ரூபாய் | சதம் |
| 1. பேனைகள் | 24.00 | ............... | 48 | 00 |
| 2. பந்துகள் | ............... | 3 | 120 | 00 |
| 3. புத்தகங்கள் | 60.00 | 4 | .......... | .......... |
| 4. | | கூட்டுத்தொகை | .......... | .......... |

(28) $1l\ 600ml$ பால் உள்ள பாத்திரத்தில் மேலும் $900ml$ பால் ஊற்றப்பட்டது. தற்போது பாத்திரத்திலுள்ள மொத்தப் பாலையும் ஒவ்வொன்றும் $500ml$ கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்? ..........................................

(29) (i) .............. , 15 , 21 , 27 , 33 , ................ எண் கோலத்தை இனங்கண்டு இடைவெளிகளுக்குரிய எண்களை புள்ளிக்கோடுகளில் எழுதுக

(ii) 41609 , 41906 , 41069 என்ற மூன்று எண்களிலும் சிறிய எண்ணை எழுத்தில் எழுதுக. ..........................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) கிராமிய விளையாட்டுக்களில் அடங்காதவை,
(1) கிளித்தட்டு, கிட்டியடித்தல் (2) சடுகுடு, போர்தேங்காய் அடித்தல். (3) வலைப்பந்து, மேசைப்பந்து

(31) சீகிரியா மிகவும் பிரசித்திபெற்று விளங்குவது,
(1) கற்செதுக்கல் வேலைப்பாடுகளுக்காக (2) சுவரோவியங்களுக்காக (3) உருவச் சிலைகளுக்காக

(32) அரச தகவல் நிலையங்களை அறிந்து கொள்வதற்கு பயன்படுத்த வேண்டிய தொலைபேசி இலக்கம்,
(1) 1919 (2) 1969 (3) 119

(33) மேல் மாகாணத்தில் கடலுடன் கலக்கும் நதி அல்லாதது,
(1) களனி கங்கை (2) களு கங்கை (3) வளவ கங்கை

(34) பலாப்பழத்தை வெட்டும்போது கைகளில் பூசும் பதார்த்தம்,
(1) தேங்காயெண்ணெய் (2) எலுமிச்சை சாறு (3) மண்ணெண்ணெய்

(35) பின்வருவனவற்றில் சமைப்பதற்கு பயன்படுத்தும் பூ வகைகள்,
(1) பொன்னாவரைப்பூ, கொன்றைப்பூ (2) வாழைப்பூ, அகத்திப்பூ (3) நாகலிங்கம்பூ, கடுபுல் பூ

(36) இலங்கையின் மிகப் பெரிய பாலம்,
(1) மன்னம்பிட்டி பாலம் (2) அரிப்பு பாலம் (3) கிண்ணியா பாலம்

(37) அழகான வர்ணங்களைக் கொண்ட இலைகளையுடைய தாவரம்,
(1) குரோட்டன் (2) ரோஜா (3) வட்டக்கண்ணி

(38) இலங்கையை கடைசியாக ஆட்சி செய்த அந்நியர் நாட்டவர்,
(1) போர்த்துக்கேயர் (2) ஆங்கிலேயர் (3) ஒல்லாந்தர்

(39) ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு பதக்கங்களைப் பெற்றுக் கொடுத்தவர்கள்,
(1) டங்கன் வைற், சுசந்திகா ஜயசிங்க (2) தமயந்தி தர்சா, முத்தையா முரளிதரன் (3) டங்கன் வைற், தமயந்தி தர்சா

(40) பக்க வேரில் உணவை சேமித்து வைத்திருக்கும் தாவரம்,
(1) கரட் (2) முள்ளங்கி (3) மரவள்ளி

Education கல்வி අධ්‍යාපන kalvi.lk

(41) வீட்டிலுள்ள பலா மரமொன்றை வெட்டுவதற்கு அனுமதி வழங்கும் நிறுவனம்,

(1) பொலிஸ் நிலையம் (2) பிரதேச செயலகம் (3) நகர சபை

(42) காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள்,

(1) எருக்கலை, எண்ணை (2) நாயுருவி, மஞ்சாடி (3) ஆமணக்கு, இறப்பர்

(43) நீரிலும் நிலத்திலும் வாழ்வதற்கான இயல்புகளைக் கொண்ட பிராணிகள்,

(1) பல்லி, உடும்பு (2) மீன், கும்பிடுபூச்சி (3) ஆமை, முதலை

(44) தனது வீடாகப் புற்றை அமைத்துக்கொள்ளும் பிராணி,

(1) ஈசல் (2) கறையான் (3) குளவி

(45) முயல் விரும்பி உண்ணும் தாவரம்,

(1) குப்பைமேனி (2) துளசி (3) சிறுபுல்லடி

(46) மழை வருவதை முன்கூட்டி அறியக்கூடிய பிராணிகள்,

(1) மயில், ஈசல் (2) சிலந்தி, குளவி (3) முயல், வாத்து

(47) உணவு உட்கொள்ளும் முன் பின்பற்ற வேண்டிய நற்பழக்கங்களுள் அடங்காதது,

(1) உணவு உண்பதற்கு ஏற்ற இடத்தில் அமருதல். (2) வாயின் வெளிப்புறத்தே உணவுபடாது இருத்தல்.

(3) சுத்தமான நீரினால் கை கழுவுதல்.

(48) தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் ஊடகம் அல்லாதது,

(1) தொலைக்காட்சி (2) வானொலி (3) பத்திரிகை

(49) நீர்வெறுப்பு நோயைப் பரப்பும் பிராணிகள் மாத்திரம் இடம்பெறும் விடை,

(1) பூனை, நாய் (2) நுளம்பு, எலி (3) குரங்கு, வீட்டு ஈ

(50) அதிகளவான மின்சாரம் பயன்படுத்தப்படும் மின்குமிழ்,

(1)  (2)  (3) 

(51) சந்தையில் விற்பனை செய்யப்படும் குளிர்பான போத்தலொன்றின் மேலுறையில் சீனியின் அளவு குறிக்க பயன்படும் நிறங்கள்,

(1) வெள்ளை, நீலம், மஞ்சள் (2) சிவப்பு, மஞ்சள், பச்சை (3) கறுப்பு, சிவப்பு, கபிலம்

(52) இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய புனித வெள்ளரசு மரம் காணப்படும் இடம்,

(1) பொலன்னறுவை (2) சீகிரியா (3) அநுராதபுரம்

(53) சட்டக்காந்தத்தில் கவரும் தன்மை அதிகம் உள்ளது,

(1) வட முனையில் (2) வட முனை, தென் முனை இரண்டிலும் (3) தென் முனையில்

(54) தேசியக் கொடியிலுள்ள அரச இலைகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 6 (3) 3

(55) விற்றமின்கள் உடலில் சேர்வதனால்,

(1) உடல் வளர்ச்சியடையும். (2) உடலுக்குச் சக்தி கிடைக்கும். (3) நோய்களிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும்.

(56) ஊர்வனவற்றை கொண்ட விடை அல்லாதது,

(1) கபரகொயா, முதலை (2) கீரி, அணில் (3) உடும்பு, ஓணான்

(57) தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும் சந்தர்ப்பம்,

(1) தேசிய துக்க தினத்தில் (2) தேசிய விளையாட்டுப் போட்டிகளில் (3) சுதந்திர தினத்தில்

(58) 

இவ்வுரு உணர்த்தும் கருத்து,

(1) வலப்பக்கமாகத் திரும்ப வேண்டும் என்பதாகும். (2) வட்டமாகச் செல்லல் என்பதாகும்.

(3) மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம் என்பதாகும்.

(59) "எனது கழுத்தை ஒரு வாள் வீச்சில் துண்டித்து விடுங்கள்" என ஆங்கிலேயரிடம் கூறிய வீரர்,

(1) கொங்காலேகொட பண்டா (2) மொனரவில கெப்பெட்டிபொல திசாவ (3) ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன்


**(60) "எங்கள் வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்த நாள்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ........................................................................................................................

(2) ........................................................................................................................

(3) ........................................................................................................................

Education கல்வி அதியாபன
kalvi.lk




# தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

**075 287 1457**

**BUY BOOKS**

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page